# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க,
## தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டம்

---

*(1998, ஏப்பிறல் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

1998, ஏப்பிறல் மாதம் 17 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 6.50** **தபாற் செலவு: ரூபா 2.50**

## 1998 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ. 46/95

## தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

1. இச்சட்டமானது 1998 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் என எடுத்துக் காட்டப்படும் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவு, அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவில், "ஓர் ஆயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது. 128 ஆம் அத்தியாயத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு, அப்பிரிவின் (12) என்னும் உட்பிரிவில், "ஐநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு, அப்பிரிவின், (4அ) என்னும் உட்பிரிவில், "ஐநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு, அப்பிரிவின், (4அ) என்னும் உட்பிரிவில், "ஐநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஐநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36அ ஆம் பிரிவைத் திருத்துதல்.

2-ட 041879- 1,100 (96/10)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு, அப்பிரிவின், (1) ஆம் உட்பிரிவில், "ஐநூறு ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன்" என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவு முடியும்வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன், அவர் எந்த மீறுகை தொடர்பாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாரோ அந்த மீறுகை, குற்றத்தீர்ப்பின் பின்னரும் தொடர்ந்திருக்குமானால், 110ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, அவர், மேலும் ஒரு தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அத்தவறு தொடர்பாக, தவறு அவ்வாறு தொடர்ந்திருந்த ஒவ்வொரு நாளுக்கும் ஐநூறு ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாகத்தின் 60 ஆம் பிரிவு, அப்பிரிவின், (4) ஆம் உட்பிரிவில், "ஐநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாகத்தின் 61 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது :—

"(3) இப்பிரிவு ஏற்புடையதாகும் ஏதேனும் விபத்து, ஊழியத்திலீடுபட்டுள்ள ஓர் ஆளுக்கு ஏற்படுமிடத்தும், தொழிற்சாலையின் இருப்பாட்சியாளர், கொல்லப்பட்ட அல்லது காயமடைந்த ஆளின் உள்ளபடியான தொழில்தருநராக இல்லாதவிடத்தும், இருப்பாட்சியாளர் அல்லது முகாமையாளர் அல்லது கண்காணிப்பாளர் ஒரு தோட்டத் தொழிற்சாலையின் விடயத்தில் கொல்லப் பட்ட அல்லது காயமடைந்த ஆளின் உள்ளபடியான தொழில்தருநரிடமிருந்து விதித்துரைக்கப்படக்கூடிய வாறான, அத்தகைய படிவத்திலும் அத்தகைய விவரங்களுடனும் இணைக்கப்பட்ட விபத்துப்பற்றிய எழுத்திலான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் மாவட்ட தொழிற்சாலை பரிசோதனைப் பொறியியலாளருக்கு அவ்வறிவித்தலை உடனடியாக அனுப்பச் செய்வித்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பத்து ரூபாக் கட்டணம் ஒன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருநூறு ரூபாக் கட்டணம் ஒன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஐம்பது ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவு, அப்பிரிவின், (1) ஆம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியில், "நூறு ரூபாய்" என்னும் சொற்கள் அப்பந்தியில் தோன்றுகின்ற இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, "ஐயாயிரம் ரூபாய்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவு, அப்பிரிவின், (2) ஆம் உட்பிரிவில் (உ) என்னும் பந்தியில், "ஐம்பது ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 87ஆம் பிரிவைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவு, அப்பிரிவின், (4) ஆம் உட்பிரிவில், "நூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவு, அப்பிரிவின், (3) ஆம் உட்பிரிவில், "ஐம்பது ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவு, அப்பிரிவின், (4) ஆம் உட்பிரிவில், "ஐம்பது ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 109 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 109 ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :–

வெளிப்படையான தண்டம் ஏற்பாடு செய்யப்படாத தவறுக்கான குற்றப் பணங்கள்.

109. (1) இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டனவுக்கு அமைவாக, வெளிப்படையான குற்றப்பணம் ஏற்பாடு செய்யப்படாத இக்கட்டளைச் சட்டத்தின்கீழான ஒரு தவறுக்குக் குற்றவாளியான எவரேனும் ஆள்—

(அ) முதல் தவறு ஒன்றின் விடயத்தில், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப் பணத்திற்கு ;

(ஆ) ((2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்ட தவறொன்று தொடர்ந்து புரியப் படுதல் தொடர்பிலான தவறொன்றாக இல்லாத) இரண்டாவது தவறொன்றின் விடயத்தில் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத ஆனால் பன்னீராயிரத்து ஐநூறு ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப் பணத் திற்கு ;

(இ) ((2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்ட தவறொன்று தொடர்ந்து புரியப்படு தல் தொடர்பிலான தவறொன்றாக இல் லாத) மூன்றாவது அல்லது அடுத்துவரும் தவறொன்றின் விடயத்தில் பன்னீரா யிரத்து ஐநூறு ரூபாவை விஞ்சுகின்ற ஆனால் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கு,

ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஒரு தவறுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு, தண்டனை விதிக்கப்பட்ட எவரேனும் ஆள், அவர் எம்மீறுகை தொடர்பாக அவ்வாறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுத் தண்டிக்கப் பட்டுள்ளாரோ அம்மீறுகையைத் தொடர்ந்து புரிகின்றவிடத்து அவர் —

(110 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக) மேலும் ஒரு தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அதன் தொடர்பில் அத்தகைய மீறுகை அவ்வாறு தொடர்ந்திருந்த ஒவ்வொரு நாளுக்கும் ஐநூறு ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப் பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்.".

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 110 ஆம் பிரிவு, "ஐம்பது ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 110 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 111 ஆம் பிரிவு, "ஆயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நூறாயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 111 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 112 ஆம் பிரிவு, "ஐம்பது ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 112 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவு, "ஆயிரம் ரூபாவை விஞ்சாத அல்லது மூன்று மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**21.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.